**வகுப்பு : 6**

தேர்வு எண் 2 1 0 2

# முதல் பருவம்- தொகுத்தறி மதிப்பீடு(SA)-2024-25

## அறிவியல்

நேரம் : 2.00 மணி] [மொத்த மதிப்பெண்கள் : 60

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 8x1=8

1. அளவிடப்படக்கூடிய அளவிற்கு --------- என்று பெயர்.
   அ) இயல் அளவீடு ஆ) அளவீடு இ) அலகு ஈ) இயக்கம்
2. வேகத்தின் அலகு ---------
   அ) மீ ஆ) வினாடி இ) கிலோகிராம் ஈ) மீ/வி
3. ----------- பருப்பொருளால் ஆனதல்ல.
   அ) தங்க மோதிரம் ஆ) இரும்பு ஆணி இ) ஒளி ஈ) எண்ணெய்த் துளி
4. தர்பூசணிப் பழத்தில் உள்ள விதைகளை -------- முறையில் நீக்கலாம்?
   அ) கைகளால் தெரிந்தெடுத்தல் ஆ) வடிகட்டுதல்
   இ) காந்தப் பிரிப்பு ஈ) தெளிய வைத்து இறுத்தல்
5. பின்வருவனவற்றுள் எது கலவை அல்ல?
   அ) பாலுடன் கலந்த காபி ஆ) எலுமிச்சைச்சாறு
   இ) நீர் ஈ) கொட்டைகள் புதைந்த ஐஸ்கிரீம்
6. ஆகாயத் தாமரையின் வாழிடம்
   அ) நீர் ஆ) நிலம் இ) பாலைவனம் ஈ) மலை
7. குளம் --------- வாழிடத்திற்கு ஒரு உதாரணம்
   அ) கடல் ஆ) நன்னீர் இ) பாலைவனம் ஈ) மலைகள்
8. பாக்டீரியா, ஒரு சிறிய ---------- நுண்ணுயிரி
   அ) புரோகேரியோட்டிக் ஆ) யூகேரியோட்டிக்
   இ) புரோட்டோசோவா ஈ) செல்களற்ற

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக :** 8x1=8

9. ஊட்டச்சத்துக் குறைபாடு ------- நோய்களுக்கு வழிவகுக்கிறது.
10. அயோடின் சத்துக் குறைபாடு பெரியவர்களில் -------- நோயை ஏற்படுத்துகிறது.
11. டைபாய்டு நோய், --------- மற்றும் நீர் மாசுபடுவதால் பரவுகிறது.
12. செல் எண்ணிக்கையின் அடிப்படையில் விலங்குகளை ------- மற்றும் ------ என வகைப்படுத்தலாம்.
13. அமீபா ------ உதவியுடன் இடப்பெயர்ச்சி செய்கிறது.



Scanned with CamScanner

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

14. புவிப்பரப்பு ------ % நீரால் மூடப்பட்டுள்ளது பூமியில் காணப்படும் மிகவும் வறண்ட பகுதி ------

15. ஊன்றுதல், உறிஞ்சுதல் ஆகிய இரண்டு -------- ன் வேலை

16. பருப்பொருள் என்பது -------- ஆல் ஆனது.

III. பொருத்துக. 5x1=5

17. வைட்டமின் A – அ) ரிக்கெட்ஸ்

18. வைட்டமின் B – ஆ) மாலைக்கண் நோய்

19. வைட்டமின் C – இ) மலட்டுத் தன்மை

20. வைட்டமின் D – ஈ) பெரி பெரி

21. வைட்டமின் E – உ) ஸ்கர்வி

IV. எவையேனும் 12 வினாக்களுக்கு குறுகிய விடையளிக்கவும். 12x2=24

22. நிறை – வரையறு.

23. ஒரு அளவீட்டில் இருக்கும் இரு பகுதிகள் யாவை?

24. சுழற்சி இயக்கம், வளைவுப்பாதை இயக்கம் வேறுபடுத்துக.

25. பூமியின் சுழற்சி கால ஒழுங்கு இயக்கமாகும் – காரணம் கூறு.

26. கலவைகளை நாம் ஏன் பிரித்தெடுக்க வேண்டும்?

27. பருப்பொருள் வரையறு.

28. வாழிடம் என்பதை வரையறு.

29. பாலைவனத் தாவரங்கள் சிலவற்றைக் குறிப்பிடுக.

30. இலைக்கும் ஒளிச் சேர்க்கைக்கும் இடையே உள்ள தொடர்பு என்ன?

31. பாம்புகளின் உடல் பகுதிகள் யாவை?

32. இந்தியாவில் ஒட்டகங்களை நாம் எங்கு காண முடியும்?

33. கார்போஹைட்ரேட் மற்றும் புரதம் வேறுபடுத்தி எழுதுக.

34. சரிவிகித உணவு – வரையறு.

35. பழங்களையும், காய்கறிகளையும் வெட்டிய பின் அவற்றை நீரில் கழுவக் கூடாது ஏன்?

36. வைரஸால் ஏற்படும் நோய்கள் இரண்டினை எழுதுக.

V. விரிவான விடையளிக்கவும்: (எவையேனும் மூன்று வினாக்களுக்கும் மட்டும்) 3x5=15

37. வைட்டமின்களையும் அவற்றின் குறைபாட்டால் ஏற்படும் நோய்களையும் அட்டவணைப்படுத்துக.

38. பாலைவனங்களில் வாழ்வதற்கேற்ப ஒட்டகங்களில் காணப்படும் தகவமைப்புகளை விவரி.

39. வேர் மற்றும் தண்டு ஆகியவற்றின் பணிகளைப் பட்டியலிடுக.

40. பல்வேறு இயக்கங்களை உதாரணத்துடன் வகைப்படுத்துக.



Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com